# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாந் தவணைப் பரீட்சை - 2023

| தரம் - 9 | வரலாறு | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................

### பகுதி I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. ஒல்லாந்தினை அக்காலத்தில் ஆட்சி செய்த ஸ்பானியர்கள் பின்பற்றிய சமயம் பின்வருவனவற்றுள் எது?
 1) உரோமன் கத்தோலிக்கம் 2) புரட்டஸ்தாந்து
 3) அங்கிலிக்கன் 4) கிறிஸ்தவம்

02. மன்னனைச் சந்திக்கும்படி விடுத்த அழைப்பும் அப்போது நிலவிய பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்குமாக இலங்கை வந்த ஒல்லாந்த தூதுவர்.
 1) ஜோரிஸ் வான் ஸ்பில் பேர்ஜன்
 2) ஜெனரல் ஜெராட் ஹல்ப்ட்
 3) கலன் அல்பஸ்
 4) கொர்னேலியஸ் டெகல்

03. 1753 ஆம் ஆண்டு உபாலி தேரரின் தலைமையில் பிக்குகள் சிலரை அழைத்து வந்து இலங்கையில் உபசம்பதா சடங்கினை நடாத்திய அரசன்.
 1) ஸ்ரீ விஜய இராஜசிங்கன் 2) இராஜாதி இராஜசிங்கன்
 3) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் 4) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

04. கண்டி மன்னனுடனும் மக்களுடனும் நல்லுறவு கொள்ளும் வரை அவ்விராச்சியத்தை ஆக்கிரமிப்பதில் பிரித்தானியர் வெற்றி பெறமுடியாது என்பதனை உணர்ந்து செயற்பட்ட பிரித்தானிய ஆளுநர்.
 1) ஆளுநர் தோமஸ் மெயிட்லண்ட்
 2) ஆளுநர் பிரட்ரிக் நோர்த்
 3) ஜோன் டொயிலி
 4) றொபட் பிரௌன்றிக்

05. ஒல்லாந்தர் கால நிர்வாக ஒழுங்கமைப்பில் "ஓபர்ஹீப்ட்"என்ற அதிகாரிக்கு பொறுப்பாக்கப்பட்ருந்த பிரிவு.
 1) வருமானப் பிரிவு 2) இராணுவப்பிரிவு
 3) சிவில் நிருவாகப் பிரிவு 4) வர்த்தகப் பிரிவு

06. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் அரியணையிலிருந்து அகற்றப்பட்டதாகவும் அவனது அனைத்து உறவினர்களும் கண்டி அரியணை மீதான சகல உரிமைகளிலிருந்தும் நீக்கப்பட்டதாகவும் குறிப்பிடும் கண்டி உடன்படிக்கை வாசகம்.
 1) 2ஆம் உறுப்புரை 2) 4 ஆம் உறுப்புரை
 3) 5ம் உறுப்புரை 4) 6ஆம் 7ஆம் உறுப்புரை



kalvi.lk

07. பிரித்தானியரது (1798 – 1802) வரையான காலப்பகுதியில் நடைபெற்ற இரட்டை ஆட்சிமுறை தோல்வியடைந்தமைக்கான பிரதான காரணம்.

1) பொருளாதார நடவடிக்கைகள் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக கம்பனியிடம் வழங்கப்பட்டமை.
2) அரசியல் நடவடிக்கைக் பிரித்தானிய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டமை
3) தொடர்ந்து வர்த்தக வரிவசூலிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை
4) பிரித்தானிய வர்த்தக கம்பனியின் உத்தியோகத்தைதர்களிடமிருந்து ஆளுநருக்கு தேவையான ஒத்துழைப்புக்கிடைக்காமை

08. பிலிமத்தலாவையின் மரணத்தின் பின்னர் ஸ்ரீவிக்கிரம இராஜசிங்க மன்னன் தன்னுடைய முதலமைச்சர் பதவிக்கு நியமித்தவர்

1) எஹலப் பொல
2) மொல்லி கொடை
3) எக்னெலி கொட
4) வாரியப்பொல ஸ்ரீ சுமங்கல தேரர்

09. அருகில் காட்டப்பட்டுள்ள உருவினால் குறிக்கப்படும் கட்டிடம்.



1) இலங்கையில் ஒல்லாந்தரது கட்டடக்கலை
2) கண்டி அரச சபை
3) யாழ்ப்பாணக் கோட்டை
4) காலிக் கோட்டை

10. இலங்கையில் அதிகளவு ஆட்சிப் பிரதேசங்களை கைப்பற்றி ஆட்சி புரிந்த ஐரோப்பியர்களினது மிகச் சரியான ஏறுவரிசை............

1) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர்
2) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரான்சியர்
3) ஒல்லாந்தர், போர்த்துக்கேயர், பிரித்தானியர்
4) பிரித்தானியர், ஒல்லாந்தர், போர்த்துக்கேயர்

11. 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் ஆசியாவிலிருந்து கொண்டு சென்ற வாசனைப் பொருட்களை ஒல்லாந்தர்களுக்கு விற்பனை செய்த இடம்.

1) கோவா
2) லிஸ்பன்
3) சென்னை
4) பத்தேவியா

12. பிட்டிகல் கோறளையில் கறுவா உரிப்பதற்கு ஒல்லாந்தருக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கிய கண்டி அரசன்.

1) முதலாம் விமலதர்மசூரியன்
2) இரண்டாம் விமலதர்மசூரியன்
3) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
4) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

13. முதலாம் விமலதர்ம சூரியனுடன் ஆரம்பமான அரச பரம்பரை ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்க மன்னனுடன் முடிவடையக் காரணம்.

1) ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான முரண்பாடு.
2) ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கனிடம் காணப்பட்ட ஆளுமைக் குறைபாடு.
3) ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திர சிங்கன் பிரித்தானியரின் உதவியை நாடியமை
4) ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கனுக்கு வாரிசு உரிமை இல்லாமை



kalvi.lk

14. ''கரையோரம் தொடக்கம் நாட்டின் உட்பகுதியில் ஒரு கவ்வை (6 km) அளவு பிரதேசம் ஒல்லாந்தருக்கு உரித்தாகும்.''என்ற விடயம் பதிவாகியுள்ள உடன்படிக்கை?

1) 1638 ஆம் ஆண்டு உடன்படிக்கை
2) 1766 ஆம் ஆண்டு உடன்படிக்கை
3) கண்டி உடன்படிக்கை
4) வெஸ்டவோல்ட் இன் உடன்படிக்கை

15. ஹமில்டன் கால்வாய் போன்ற கால்வாய்களை அமைத்து அவற்றைப் பொருள்களைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தியதன் மூலம் ஒல்லாந்தர்கள் அடைய எதிர்பார்த்த இலக்கு.

1) போக்குவரத்தை மேம்படுத்துதல்
2) கல்வியை இயலுமானவரை மேம்படுத்தல்
3) முறையான நிர்வாக செயற்பாட்டை மேற்கொள்ளல்
4) விரிவான பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல்

16. கிராமத்தலைவர், விதானை, முதலி, கோறளை போன்ற சுதேச அதிகாரிகளிற்கு சிறு நீதிமன்ற அதிகாரங்கள் காணப்பட்ட நீதி மன்றம்.

1) லான் ராத் 2) சிவில்ராத்
3) ராத்வான் ஜஸ்டிட் 4) பிஸ்கல் நீதிமன்றம்

17. இலங்கையில் ஒல்லாந்தர்களினால் பயன்படுத்தப்பட்ட சொற்களில் சட்டம் நீதிமன்றம் சார்ந்த சொற்களில் ஒன்றாக அமைய முடியாதது.

1) பிசுக்கால் 2) தோம்பு 3) தோல்க்க 4) நொத்தாரிஸ்

18. பெந்தரை ஆறு முதல் மட்டக்களப்பு வரையான கரையோரப் பிரதேசம் மற்றும் அதற்கு உரித்தான நாட்டின் உட்பகுதி என்பன அடங்கியிருந்த கொமாண்டரி வகை, பின்வருவனவற்றுள் எது?

1) கொழும்புக் கொமாண்டரி 2) யாழ்ப்பாணக் கொமாண்டரி
3) காலிக் கொமாண்டரி 4) பத்தேவியக் கொமாண்டரி

19. ஒல்லாந்தர்கள் தாம் கைப்பற்றிய கோட்டைகளில் சிலவற்றை கண்டி அரசன் இரண்டாம் இராஜசிங்க மன்னனிடம் கையளிக்காது தாமே வைத்துக்கொண்டனர். அக்கோட்டைகள் பின்வருவனவற்றுள் எது?

1) யாழ்ப்பாணம், மன்னார்
2) மட்டக்களப்பு, யாழ்ப்பாணம்
3) நீர்கொழும்பு, காலி
4) திருகோணமலை, கொழும்பு

20. பின்வரும் எந்த பயிர் தொடர்பில் இலங்கையில் மகாபத்தே திணைக்களம் போர்த்துக்கேயர் காலம் தொடக்கம் செயற்பட்டு வந்தது?

1) கோப்பி 2) கறுவா 3) தேயிலை 4) இறப்பர்

(20 x 2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி – II

- ❖ முதலாம் வினா கட்டாயமானது.
- ❖ ஏனையவற்றில் இருந்து நான்கு வினாக்களுக்கு விடை தருக.
- ❖ எல்லாமாக ஐந்து வினாக்களிற்கு விடையளித்தல் வேண்டும்.

(01) (A) பின்வரும் விடயங்களுடன் தொடர்புபட்டவற்றுக்கு சுருக்கமான விடை தருக.

01) இலங்கையிலிருந்து யானைகளை வர்த்தக சங்கத்தின் மூலம் பணம் கொடுத்துப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதியளித்த கண்டி அரசன்.

02) கி.பி 1766 ஆம் ஆண்டு உடன்படிக்கையில் கையயொப்பம் இட்ட ஒல்லாந்த ஆளுநர்.

03) கண்டி அரசனால் கோலாகலமாக வரவேற்கப்பட்ட ஒல்லாந்த தூதுவர்.

04) கியூ கடிதத்தில் கையொப்பம் இட்ட ஒல்லாந்த இளவரசன்.

05) ஜோன் டொயிலி என்னும் பிரித்தானிய உத்தியோகத்தரை நியமித்த ஆளுநர்.

06) குண்டசாலை இளவரசன் என அழைக்கப்பட்ட கண்டி அரசன்.

(6 x 1 = 6 புள்ளிகள்)

(B) பின்வரும் வரலாற்றுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இடங்களைக் குறிக்கும் எழுத்துக்களை அவற்றுக்கு நேரே எழுதுக.

01) ஒல்லாந்தர் காலத்தில் புனரமைக்கப்பட்ட யோதவாவியைக் குறிக்கும் எழுத்து. ( )


02) ஒல்லாந்த ஆளுநரினால் நிருவகிக்கப்பட்ட இலங்கையின் கொமாண்டரியைக் குறிக்கும் எழுத்து. ( )

03) இலங்கை முழுவதனையும் 133ஆண்டுகளாக ஆட்சி செய்த பிரித்தானியர் வந்திறங்கிய இடத்தினைக் குறிக்கும் எழுத்து. ( )

04) புகையிலை உற்பத்தி மற்றும் பனைமரக் கட்டைகளை அதிகம் ஒல்லாந்தர்கள் உற்பத்தி செய்த இடத்தைக் குறிக்கும் எழுத்து. ( )

05) ஒல்லாந்தர் முதன் முதலாக இலங்கை வந்திறங்கிய இடத்தினைக் குறிக்கும் எழுத்து. ( )

06) பிரித்தானியர் இலங்கையில் இறுதியாக கைப்பற்றிய இராசதானியைக் குறிக்கும் எழுத்து. ( )




(6 x 1 = 6 புள்ளிகள்)



kalvi.lk

(02) 1) ஒல்லாந்தர்களின் ஆட்சியின் போது கற்பிக்கப்பட்ட பாடங்கள் மூன்றினைக் குறிப்பிடுக?

2) ஒல்லாந்தர் கால கல்வி முறையின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

3) a) ஒல்லாந்தர்களால் பாடசாலைகள் நிறுவப்பட்ட இடங்கள் இரண்டு தருக.

b) ஒல்லாந்தர்களினால் கிறிஸ்தவ தேவாலயங்கள் அமைக்கப்பட்ட இடங்கள் மூன்று தருக?

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(03) 1) மன்னன் இரண்டாம் இராஜசிங்கனால் ஒல்லாந்தருக்கு வழங்கிய பரிசில்கள் மூன்று தருக?

2) 1638 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட வெஸ்ட் வோல்ட் உடன்படிக்கையில் உள்ள முக்கிய விடயங்கள் நான்கு தருக?

3) பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய நீதிமன்றங்களை அவற்றுக்கு நேரே எழுதுக?

(a) சுதேச மக்களுக்கு எளிமையான செலவு குறைந்த நீதிமன்றம்?

(b) ஒல்லாந்த நீதிமன்றத் தொகுதியின் உயர் நீதிமன்றம்

(c) விவாகம் தொடர்பான பிரச்சனைகளை விசாரித்தல்.

(d) ஒல்லாந்த நீதிமன்றத் தொகுதியில் கீழ்நிலை நீதிமன்றம்.

(e) அதிக இடங்களில் காணப்படும் நீதிமன்றம்.

Educations கல்வி අධ්‍යාපන

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(04) 1) நாட்டில் ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழிருந்த பிரதேசங்கள் முக்கிய மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அக் கொமாண்டரிகளைப் பெயரிடுக?

2) ஒல்லாந்தர் ஆட்சியின் காரணமாக ஏற்பட்ட சமூக பண்பாட்டுத் தாக்கங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

3) ஒல்லாந்தர்களினால் பொருளாதாரத்தை மேம்படுத்த மேற்கொண்ட பின்வரும் நடவடிக்கைகளுக்கு பொருத்தமான விடை தருக

(a) விளை நிலமாக்கப்பட்ட நிலத்தின் பெயர் :- ..............................

(b) அமைக்கப்பட்ட கால்வாயின் பெயர் :- ..............................

(c) புனரமைக்கப்பட்ட குளத்தின் பெயர் :- ..............................

(d) விரிவாக்கப்பட்ட திணைக்களத்தின் பெயர் :- ..............................

(e) ஊக்கிவிக்கப்பட்ட கைத்தொழிலின் பெயர் :- ..............................

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)



kalvi.lk

(05) 1) தோம்பு எனப்பட்ட விசேட பதிவேட்டினை போர்த்துக்கேயர் தயாரித்திருந்தனர். ஒல்லாந்தர் அதனை மேலும் மூன்றாக முறைமைப்படுத்தினர் அவற்றைக் குறிப்பிடுக.

2) இலங்கைகக்கு பின்வரும் கண்டி அரசர்கள் காலத்தில் வருகை தந்த ஒல்லாந்த தூதுவர்களின் பெயர்களை அவற்றுக்கு நேரே எழுதுக.

(a) முதலாம் விமலதர்மசூரியன் :- …………………………

(b) இரண்டாம் இராஜசிங்கன் :- …………………………

(c) இரண்டாம் விமலதர்மசூரியன் :- …………………………

(d) ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்கன் :- …………………………

3) பின்வரும் வரலாற்றுத் தகவல்களோடு தொடர்புபடும் விடயங்களுக்குச் சுருக்கமான விடை தருக.

(a) ஒல்லாந்தர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டம் எது?

(b) 1739 ஆம் ஆண்டு அச்சியந்திரமொன்றைக் கொண்டு வந்ததன் நோக்கம் யாது?

(c) கொமாண்டர்களினால் நிருவகிகப்பட்ட கொமாண்டரிகள் எவை?

(d) திரிசிங்களாதீஸ்வர என வர்ணிக்கப்பட்ட கண்டியின் ஆட்சியாளன் யார்?

(e) ஒல்லாந்தர்கள் இலங்கை நோக்கி வந்தமைக்கான பிரதான நோக்கம் யாது?

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(06) 1) இலங்கைக்கு பின்வரும் ஆண்டுகளில் வருகை தந்த பிரித்தானியத் தூதுக்குழுக்களினைப் பெயரிடுக.

a) கி.பி 1762 :- ……………………………………….

b) கி.பி 1782 :- ……………………………………….

c) கி.பி 1795 :- ……………………………………….

2) ஆங்கிலேயர்கள் இலங்கையிலிருந்து எடுத்துச் சென்ற வாசனைத் திரவியங்கள் நான்கினைப் பெயரிடுக?

3) a) பிரித்தானியரின் கவனம் இலங்கை மீது திரும்பியமைக்கான காரணம் மூன்று தருக.

b) திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk




Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457